[1992 மார்ச் 31

412—

கல்வித் தகுதியுள்ள பிறவிக் குருடர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு.

*1336—டாக்டர் சு. மணிமேகலை;

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கணவன் மனைவி இருவருமே பிறவிக் குருடர்களாக இருந்து கல்வித் தகுதியும் பெற்றிருப்பார்களேயானால் அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பளிக்க முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒரு சதவீத இட ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது,

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஆமெனில், எத்தனை பிறவிக் குருடர்கள் இதுவரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள். அதில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. எந்தெந்த துறைகளில் பிறவிக் குருடர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது ஊனமுற்றவர்களுக்கென தனியாக இட ஒதுக்கீடு செய்துள்ள அரசு, பிறவிக் குருடர்களுக்கென தனி இட ஒதுக்கீடு செய்துள்ளதா என மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிறவிக் குருடர்களுக்காக ஒரு சதவித இட ஒதுக்கீட்டை அரசு செய்திருக்கிறது. வேவைாய்ப்பு அலுவலகத்தில் இதுவரை 2,850 பேர் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அதில் 1990 இலிருந்து 1991 வரை 43 பேருக்கு, பார்வை அற்றவர்கள் 43 பேர் காது கேளாதோர் 79 பேர், கை கால் ஊனமுற்றோர் 1,354 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. இதில் ஏறக்குறைய 484 பேர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்:

திரு. வி. பி. சந்திரசேகர் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமூகத்தில் இருக்கிற கண்பார்வையற்றவர்கள் எத்தனை பேர், கண்பார்வையற்றவர்களுக்காக இருக்கின்ற பள்ளிகள் எத்தனை என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 31]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் பார்வையற்றவர்கள் 1.92 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இதில் அரசு நடத்துகின்ற பள்ளிகள் 11, அரசினால் உதவி பெற்று நடத்தப்படுகின்ற பள்ளிகள் 15 என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறவியிலே கண் பார்வையற்றவர்கள் மிகவும் பரிதாபத்திற்கு உரியவர்கள். ஆகவே, அவர்கள் மீது கருணைகூர்ந்து எந்தவொரு பதவியாக இருந்தாலும் அல்லது எந்தவொரு வேகன்சியாக இருந்தாலும் அந்த வேலையை அவர்கள் செய்ய முடியும் என்கின்ற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால் அந்தக் குருடர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்கு பின்னால் வேலை வாய்ப்பில் இந்தக் கண் பார்வையற்றவர்கள் போட்டிக்கு வருவார்கள் என்று சொன்னால் முதல் முன்னுரிமையை அவர்களாலே செய்யக் கூடிய பணிகளாக இருந்தால் அவர்களுக்குத்தான் வழங்க வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவன், மனைவி இருவரில் ஒருவர் குருடராக இருந்து கல்வித் தகுதி இருந்தால், குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த ஒரு வருடத்திற்குள் அரசு வேலை கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்பார்வை அற்றவர்களில் கணவன்’ மனைவி இருவரில் ஒருவர் திருமணத்தின்போது கண் பார்வை அற்றவர்களாக இருந்தால் அரசு அவர்களுக்குத் திருமண உதவித் தொகையாக 500 ரூபாயும், ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 5,500ம் பாராட்டுப் பத்திரமும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோல வேலை அலுவலகங்களின் மூலமாகப் பதிவு செய்து, அவர்கள் அந்தத் தேர்வுக்குச் செல்கிறபோது, அப்படிப்பட்டவர்கள் செய்யக்கூடிய

வேலை எதுவாக இருந்தாலும், அவர்கள் அந்தப் பணிக்குச் சரியானவர்களாக இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம், பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 413, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

413—

பச்சைமலையில் பெரும் பழப் பண்ணை அமைத்தல்

*5564.—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், பச்சை மலையில் பெரும் பழப் பண்ணை (Giant Orchard) அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியில் உள்ள பச்சைமலையில் அரசுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அதிக அளவில் பழங்கள் விளைவிக்கவும் மலைவாழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் விளைவிக்கும் பழங்களை பெரும் பழப் பண்ணையில் விற்பதற்கும், அதே சமயம் அவர்களுக்கு நல்ல விலையும் கிடைக்க வாய்ப்பு இருப்பதால், பச்சைமலையில், அடுத்த நிதி ஆண்டிலாவது பெரும் பழப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.